தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989, பிப்ரவரி 8, புதன்கிழமை

தை 26, விபவ:—திருவள்ளுவராண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10—00 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. கே. ரமணி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1, உறுப்பினர் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கே, ரமணி) : இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் ஆகும். ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் இருந்தால் அவர்கள் இப்போது உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். அரசியலமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாமல் பேரவையில் அமரக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் இப்போது உறுதிமொழி எடுத்துக் கொள்வார்.

பின்னர் திரு. பி. வி. இராஜேந்திரன் உறுதிமொழி* எடுத்துக் கொண்டார்.

2. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கே. ரமணி) : அடுத்து, பேரவையின் இன்றைய அலுவல் "அரசியலமைப்பின் 178-வது பிரிவின்கீழ் பேரவைத் தலைவர் தேர்தல்" ஆகும். இப்பதவிக்கு வேட்பாளரின் வேட்புத் தாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை விதிகளில் 7-வது விதி, உள் விதி 4-ன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன் மொழிந்தவர், அதை வழி மொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம் வருமாறு :

நியமனம் செய்யப் பெற்றவர்	..	டாக்டர். மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்
முன் மொழிந்தவர்	.. ..	மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி
வழி மொழிந்தவர்	... ..	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்

*உறுதிமொழி கடவுள் பெயரால் எடுத்துக் கொள்ளப் பெற்றது

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989, பிப்ரவரி 8, புதன்கிழமை

தை 26, விபவ:—திருவள்ளுவராண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10—00 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. கே. ரமணி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1, உறுப்பினர் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கே, ரமணி) : இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் ஆகும். ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் இருந்தால் அவர்கள் இப்போது உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். அரசியலமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாமல் பேரவையில் அமரக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் இப்போது உறுதிமொழி எடுத்துக் கொள்வார்.

பின்னர் திரு. பி. வி. இராஜேந்திரன் உறுதிமொழி* எடுத்துக் கொண்டார்.

2. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கே. ரமணி) : அடுத்து, பேரவையின் இன்றைய அலுவல் "அரசியலமைப்பின் 178-வது பிரிவின்கீழ் பேரவைத் தலைவர் தேர்தல்" ஆகும். இப்பதவிக்கு வேட்பாளரின் வேட்புத் தாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை விதிகளில் 7-வது விதி, உள் விதி 4-ன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன் மொழிந்தவர், அதை வழி மொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம் வருமாறு :

நியமனம் செய்யப் பெற்றவர்	..	டாக்டர். மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்
முன் மொழிந்தவர்	.. ..	மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி
வழி மொழிந்தவர்	... ..	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்

*உறுதிமொழி கடவுள் பெயரால் எடுத்துக் கொள்ளப் பெற்றது

(தற்காலிகப் பேரவைத்தலைவர்] [1989 பிப்ரவரி 8

ஓரே ஒரு உறுப்பினர் மட்டும் பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பதால், டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இத்துடன் என்னுடைய அலுவல் முடிகிறது. இப்போது இப்பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்களும் அழைத்து வந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எழுந்து நிற்க வேண்டும். பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமர்ந்த பின், எல்லோரும் அமர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்—(மேசையைத் தட்டும் ஒலி)

3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தலாகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்காக வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவையின் விதி 8, உள் விதி 2-ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன் மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். அதன் விவரம் வருமாறு :

நியமனம் செய்யப்பெற்றவர்	..	திரு. பி. துரைசாமி
முன்மொழிந்தவர்	..	மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி
வழிமொழிந்தவர்	..	மாண்புமிகு திரு. துரைமுருகன்

ஓரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப் பெற்றிருப்பதால் திரு. பி. துரைசாமி அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்

(தற்காலிகப் பேரவைத்தலைவர்] [1989 பிப்ரவரி 8

ஓரே ஒரு உறுப்பினர் மட்டும் பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பதால், டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இத்துடன் என்னுடைய அலுவல் முடிகிறது. இப்போது இப்பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்களும் அழைத்து வந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எழுந்து நிற்க வேண்டும். பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமர்ந்த பின், எல்லோரும் அமர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்—(மேசையைத் தட்டும் ஒலி)

3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தலாகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்காக வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவையின் விதி 8, உள் விதி 2-ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன் மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். அதன் விவரம் வருமாறு :

நியமனம் செய்யப்பெற்றவர்	..	திரு. பி. துரைசாமி
முன்மொழிந்தவர்	..	மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி
வழிமொழிந்தவர்	..	மாண்புமிகு திரு. துரைமுருகன்

ஓரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப் பெற்றிருப்பதால் திரு. பி. துரைசாமி அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்

என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

4. பேரவைத் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தது, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்குப் பாராட்டுதல்கள். முதலில் பாராட்டுரையைத் தொடங்கி வைக்கின்றவர் மாண்புமிகு பேரவை முன்னவர் கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. அன்பழகனார் அவர்கள்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவையின் தலைவர் அவர்களே, தங்களை ஒருமனதாக இந்த அவை தேர்ந்தெடுத்து, தங்களைப் பாராட்டுகிற ஒரு நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்திருப்பதற்காக முன்னவர் என்ற முறையில் எனது மகிழ்ச்சியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்க்குடிமகன் என்ற பெயரோடு புகழ்பெற்று, கல்லூரியினுடைய முதல்வராகப் பல ஆண்டு காலம் சிறப்பாகப் பணிபுரிந்த தாங்கள் பேரவையினுடைய தலைவர் என்ற அந்தத் தகுதியை இன்றையதினம் பெற்றிருக்கின்ற நிலையில் தங்களுடைய கடமையை மிகச் சிறப்பாக ஆற்றுவதற்கான எல்லாத் தகுதிகளையும் பெற்றிருக்கிறீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்த அவை தங்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய அந்த நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துகிற அளவிற்கு, ஆளும் கட்சி மட்டுமல்லாமல் எதிர்க் கட்சியிலே உள்ளவர்களும் உளப்பூர்வமாக வரவேற்கிற அளவிற்கு ஒரு நல்ல சூழ்நிலையில் தாங்கள் இந்தப் பதவியை ஏற்றிருக்கிறீர்கள் என்பதைக் குறிப்பிட்டுத் தங்களைப் பாராட்ட விரும்புகிறேன்.

சட்டப் பேரவை ஒரு வரலாறு படைத்தப் பேரவை என்பது நாடறிந்த ஒன்றாகும். தமிழ்நாட்டிலே வாழ்கிற ஏறத்தாழ 5 கோடி மக்களுடைய உள்ளத்தினுடைய பிரதிபலிப்பாக, எண்ணங்களின் வெளிப்பாட்டுக்கான வாயிலாக, அவர்களுடைய எதிர்கால நல்வாழ்விற்கு வழி தேட்வேண்டிய ஒரு அமைப்பாக, ஜனநாயகத்தினுடைய கட்டுக் கோப்பாக, ஒருவகையில் அதனுடைய கோபுரமாக விளங்குகிற இந்தச் சட்டப்பேரவை மிகப் பெரிய உயர்ந்த குறிக்கோள்கள் கொண்டதாகச் செயல்படுவதற்கு, தங்களுடைய தலைமை உறுதுணையாக விளங்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

4. பேரவைத் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தது, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்குப் பாராட்டுதல்கள். முதலில் பாராட்டுரையைத் தொடங்கி வைக்கின்றவர் மாண்புமிகு பேரவை முன்னவர் கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. அன்பழகனார் அவர்கள்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவையின் தலைவர் அவர்களே, தங்களை ஒருமனதாக இந்த அவை தேர்ந்தெடுத்து, தங்களைப் பாராட்டுகிற ஒரு நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்திருப்பதற்காக முன்னவர் என்ற முறையில் எனது மகிழ்ச்சியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்க்குடிமகன் என்ற பெயரோடு புகழ்பெற்று, கல்லூரியினுடைய முதல்வராகப் பல ஆண்டு காலம் சிறப்பாகப் பணிபுரிந்த தாங்கள் பேரவையினுடைய தலைவர் என்ற அந்தத் தகுதியை இன்றையதினம் பெற்றிருக்கின்ற நிலையில் தங்களுடைய கடமையை மிகச் சிறப்பாக ஆற்றுவதற்கான எல்லாத் தகுதிகளையும் பெற்றிருக்கிறீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்த அவை தங்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய அந்த நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துகிற அளவிற்கு, ஆளும் கட்சி மட்டுமல்லாமல் எதிர்க் கட்சியிலே உள்ளவர்களும் உளப்பூர்வமாக வரவேற்கிற அளவிற்கு ஒரு நல்ல சூழ்நிலையில் தாங்கள் இந்தப் பதவியை ஏற்றிருக்கிறீர்கள் என்பதைக் குறிப்பிட்டுத் தங்களைப் பாராட்ட விரும்புகிறேன்.

சட்டப் பேரவை ஒரு வரலாறு படைத்தப் பேரவை என்பது நாடறிந்த ஒன்றாகும். தமிழ்நாட்டிலே வாழ்கிற ஏறத்தாழ 5 கோடி மக்களுடைய உள்ளத்தினுடைய பிரதிபலிப்பாக, எண்ணங்களின் வெளிப்பாட்டுக்கான வாயிலாக, அவர்களுடைய எதிர்கால நல்வாழ்விற்கு வழி தேட்வேண்டிய ஒரு அமைப்பாக, ஜனநாயகத்தினுடைய கட்டுக் கோப்பாக, ஒருவகையில் அதனுடைய கோபுரமாக விளங்குகிற இந்தச் சட்டப்பேரவை மிகப் பெரிய உயர்ந்த குறிக்கோள்கள் கொண்டதாகச் செயல்படுவதற்கு, தங்களுடைய தலைமை உறுதுணையாக விளங்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

[பேராசிரியர் க. அன்பழகன்) [1989 பிப்ரவரி 8

(முற்பகல் 10–10)

சான்றாண்மை என்பதுதான் வள்ளுவர் வகுத்த அந்த வாழ்க்கை நெறியினுடைய உச்ச நிலைத் தகுதியாகும், தனி மனிதனுடைய வாழ்க்கையிலே காணப்பட வேண்டிய சான்றாண்மை எந்தத் துறையில், எந்தப் பதவியில், எந்த நிலையில் இருந்தாலும் இடம் பெற வேண்டிய ஒன்று. அந்தச் சான்றாண்மைக்கு அடித்தட்டாக அமைவது நடுவு நிலைமை. அந்த நடுவு நிலைமையைக் காப்பாற்றுகிற தகுதி தங்களுக்கு உண்டு என்பதால், நடுவு நிலைமையை உணர்ந்தவர் சான்றாண்மையைப் போற்றுபவர் என்ற அந்தத் தகுதி காரணமாக இந்தப் பேரவையினுடைய தலைவராகத் தாங்கள் விளங்குகிற போது, இந்த அவையினுடைய தகுதியும், இந்த அவையில் கடைப்பிடிக்க வேண்டிய நடுவு நிலைமை நோக்கமும் சிறப்பாகக் காப்பாற்றப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஆளும் கட்சி, எதிர்க் கட்சி, மற்ற எதிர்க் கட்சிகள் என்ற நிலையிலே சட்டமன்றத்திலே பணியாற்றுவதுதான், சட்ட மன்றத்தினுடைய முடிவுகளை ஆய்ந்து பரிசீலிப்பதற்கும், அந்த முடிவுகளிலே தேவையான மாற்றத்தைச் செய்வதற்கும், உரிய வழி முறையாக ஜனநாயக அமைப்புகளில் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கின்ற ஒன்று என்ற முறையில், அப்படிப்பட்ட கருத்துக்களுக்கு இடம் உண்டு என்பதோடு அந்த மாறுபட்ட கருத்துக்களை எல்லாம் பரிசீலிக்கிற அந்த வாய்ப்பை இந்த அவைக்கு உருவாக்கித் தருகிறபோது, ஒரு கல்லூரி முதல்வராக இருந்து பல்வேறுபட்ட கருத்துக்கள் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், ஆகியோர்களுக்கு இடையே பழகியும் சமுதாயத்தில் உறவுகொண்டு பல்வேறு பட்டிமன்றங்களில் எல்லாம் நடுவராக இருந்து அதன் மூலமாகத் தகுந்த அளவுக்குக் கருத்துக்களைச் சீர்தூக்குகிற வாய்ப்பும் பெற்று இருக்கிற தாங்கள் இந்த அவையிலேயும் அனைத்துத் தரப்புக் கருத்துக்களும் இடம் பெறுவதற்கு வழி வகுப்பீர்கள், அதற்கு உறுதுணையாக இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். எண்ணிக்கை அடிப்படையிலே மட்டும் ஆளும் கட்சி பெரிய கட்சி என்று கருதுவதை விட, மக்களுக்கு ஆற்ற வேண்டிய மிகப் பெரிய பணிகளை ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்பு உள்ள கட்சி என்ற முறையில் மதிக்கப்பட வேண்டியது என்பதும், எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் மாற்றுக் கட்சிகள் தங்களுடைய கருத்துக்களை வெளியிட வாய்ப்புப் பெற வேண்டும் என்பதும், ஜனநாயகத்தின் மிக முக்கியமானவை என்றாலும், அனைத்துக்கும் ஒரு அளவு உண்டு: உரிய அளவு உண்டு என்பதையும் தாங்கள் எண்ணிப் பார்த்து, அளவோடு அனைத்தும் நடைபெறுவது தான் இந்த அவைக்கு அழகு என்பதையும் தாங்கள் உள்ளத்திலே கொண்டு இந்த அவையினுடைய அழகும், தகுதியும் மேம்படுவதற்கு, அறிவும், திறனும் வளர்வதற்கு, இந்த அவையிலே இடம் பெற்று ஆட்சி மொழியாகத் திகழ்கிற தமிழினுடைய நலன் ஓங்குவதற்கு ''தமிழ்க் குடிமகன்'' என்ற பெயர் கொண்ட தாங்கள், தங்களுடைய

1989 பிப்ரவரி 8] [பேராசிரியர். க. அன்பழகன்]

பெயருக்கு ஏற்ப இதனுடைய தகுதியைச் சிறப்புச் செய்ய உறுதுணையாக இருக்க வேண்டும் என்று தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தங்களுக்கு உறுதுணையாக விளங்குகின்ற, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற வழக்குரைஞர் திரு. துரைசாமி அவர்கள் 10 ஆண்டுகளாக வழக்குரைஞராகப் பணியாற்றி இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், சட்டத் துறையிலே பயிற்சி உள்வராக இருப்பவர் துணைத் தலைவராகப் பொறுப்பு ஏற்கிற காரணத்தால், அவரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், தங்களுக்கு உறுதுணையாகச் செயற்படவும், இந்த அவையினுடைய பெருமையைக் காப்பாற்றுவதற்கும் துணைத் தலைவர் என்ற முறையில் சிறப்பாகச் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களுக்கு என்னுடைய உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். துணைத் தலைவருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவையில் தாங்கள் பொறுப்பு ஏற்று அமர்ந்து இருக்கிற அந்தப் பீடத்தில் அமர்வதற்கு முன்னர் அந்த இடத்தில் தற்காலிகப் பேரவைத் தலைவராக இருந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் உறுதிமொழி எடுத்துக் கொள்ளத் துணை நின்று நிறைவேற்றி வைத்த 'புரோ-டெம் ஸ்பீக்கர்' என்ற அந்தப் பொறுப்பை ஏற்றிருந்த மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. கே. ரமணி அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 9-வது சட்டமன்றத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள தங்களைச் சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் இதய பூர்வமாக வாழ்த்துகிறேன். எத்தனையோ வரலாற்றுச் சிறப்புமிக்க சம்பவங்களின் தொகுப்புக்களையும், சட்ட வடிவமைப்புகளை முன்னிலைப் படுத்துகின்ற தீர்மானங்களையும், அனல் கக்கும் விவாதங்களையும் இந்த மாமன்றம் இதற்கு முன்பு சந்தித்திருக்கிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மன்றத்தின் முந்தைய தலைவர்கள் ஒரு கட்சியின் சார்பாக வெற்றி பெற்றிருந்தாலும், சட்டமன்றச் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, வேறுபாடுகளை மறந்து, கட்சி சார்பற்ற முறையில் இந்த மாமன்றத்தின் விதிகளுக்கு உட்பட்டு நல்ல தீர்ப்புக்களையே வழங்கி வந்திருக்கிறார்கள். இந்த மன்றத்தின் கண்ணியத்தை, கௌரவத்தை நாடே போற்றுகின்ற அளவிற்கு, முந்தைய தலைவர்களின் நல்ல முன்னுதாரணங்களைத் தாங்கள் ஏற்றுக்

[செல்வி ஜே. ஜெயலலிதா] [1989 பிப்ரவரி 8

கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மக்களும் இதையே தங்களிடம் எதிர்பார்க்கிறார்கள். புகழ் மிக்க கல்லூரியின் தமிழ் ஆசிரியராக இருந்து, கல்லூரி முதல்வராக உயர்ந்து, இன்று சட்டமன்றத்தின் தலைவராகப் பொறுப்பு ஏற்றுள்ளீர்கள். இந்த மாமன்றத்தின் முந்தைய வரலாற்றில் உள்ள நல்லவைகளை மட்டுமே எடுத்துக் கொண்டு, தீயவைகளை மறப்பதோடு மட்டுமல்லாமல், அந்தத் தீயவைகள் மீண்டும் இந்த மன்றத்தில் நுழையாமல் காப்பாற்றுகின்ற ஜனநாயகக் கடமை தங்களுக்கு இருக்கின்றது. இந்த மாமன்றத்தில் நல்ல வைகளே நடைபெற வேண்டுமென்று நாங்கள் விரும்பு கிறோம். இதுதான் தமிழ்க் குடிமக்களின் ஆசை. மாண்புமிகு சபாநாயகர் ஒரு தமிழ்க் குடிமகன் என்ற முறையில் சீரோடும் சிறப்போடும் நடுநிலை தவறாமல், சட்டமன்ற நடவடிக்கை களை நடத்திட எங்கள் பூரண ஆதரவு உண்டு என்று கூறி, 'சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்' இந்த மன்றத்தை நடத்த வேண்டுமென்று கூறி, சபாநாயகர் அவர்களுக்கும், துணைச் சபாநாயகர் அவர்களுக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. கருப்பையா மூப்பனார் : மதிப்பிற்கும், மாண்பிற்கும் உரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவை ஒருமனதாக இன்றைய தினம் தங்களைத் தேர்ந்தெடுத்திருப்பதற்கு என்னுடைய நிறைந்த மகிழ்ச்சியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே எனக்கு முன்னே பேசிய முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் ஆளும் கட்சிக்கும், மாற்றுக் கட்சிகளுக்குமாக வந்திருக்கின்றவர்கள் எல்லோருக்கும் பொதுவானவராகத் தாங்கள் விளங்கி, நடுநிலையிலே நின்று இந்த மன்றத்தின் சிறப்பை கடந்த காலத்தில் பல பெரியவர்கள் காப்பாற்றியதைப் போல், தாங்களும் அந்தப் பெருமையைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தங்களுடைய இந்த நல்ல முயற்சிக்கு நாங்கள் உறுதியாகத் துணை நிற்போம். உங்களுடைய முயற்சிகள் நிறைந்த வெற்றி பெறுவதற்கு எங்களுடைய உறுதியான துணை உண்டு என்று மீண்டும் நான் உறுதி கூறி, இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய வாழ்த்துக்களைக் கூறி, உங்களோடு இன்றைய தினம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற துணைச் சபாநாயகர் அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக என்னுடைய வாழ்த்துக்களைக் கூறி அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 9-வது சட்டப் பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தங்களைத் தேர்ந்தெடுத்துள்ளதற்கு மிக்க மகிழ்ச்சியையும், எங்கள் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நாங்கள் உளமார வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தச் சபையிலே இருக்கின்ற உறுப்பினர்கள்

1989 பிப்ரவரி 8] *[திரு. கே. ரமணி]*

அனைவரும் உங்களுக்கு முன்னால் சமமானவர்கள். சபையிலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் மக்களுடைய அதிகாரத்தின் ஊற்று, அவர்களுடைய பிரதிநிதிகளாக் நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

(முற்பகல் 10—20)

இந்தச் சபை, இந்தச் சட்டமன்றம், எத்தனையோ பெரியவர்களும், அரசியல் கட்சிகளுடைய சிறந்த தலைவர்களும், நாடே போற்றுகின்ற பெரியவர்களும் இருந்து செயல்பட்டிருக்கும்படியான ஒரு சபை. இந்தச் சபை, ஜனநாயகத்திற்காகவும், உண்மைக்காகவும், நேர்மைக்காகவும் வாதாடுகின்ற, அதற்கான எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுக்கின்ற இடமாக இருந்து வருவதால், எங்கள் எல்லோருடைய உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உங்கள் கையிலே தான் இருக்கிறது. அந்த ஜனநாயக உரிமைகள் கொஞ்சம்கூட பாதிக்கப்படாமல், மக்களுக்கு ஆற்ற வேண்டிய தொண்டுக்காகவே ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளதால், தங்களின் பார்வையில், தங்களின் கையில் அவை பாதுகாக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்தச் சபையினுடைய சரித்திரத்தில் ஜனநாயகத்திற்குச் சோதனைகள் ஏற்பட்ட காலம் உண்டு. கடுமையான கஷ்டங்களைத் தாங்கி நின்று ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், நாட்டு மக்கள் அத்தனை பேர்களும் எதிர்பார்க்கின்ற நற்காரியங்கள் முறையாக நடந்தேறுவதற்கும், பல துன்பங்களைக் கூட அனுபவித்து நாங்கள் இந்தச் சபையிலே வாதாடவும் அதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபடவும் முயன்றபோது சென்ற காலத்தில் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகள் எங்களுடைய உள்ளங்களில் இன்றைக்கும் பசுமையாக உள்ளன. அந்த அனுபவங்களையும் நாங்கள் எங்களோடு சேர்த்து வைத்திருக்கிறோம். நல்லவைகளையும் நாங்கள் சேர்த்து வைத்திருக்கிறோம். துன்பமயமான காரியங்களின் அனுபவங்களையும் நாங்கள் சேர்த்து வைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே இந்தச் சபையிலே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுடைய ஜனநாயக உரிமைகளை இந்த அவை பாதுகாத்து, சமமான பார்வையோடு நடந்து வந்திருக்கிறது. எதிர்க் கட்சிகள், ஆளும் கட்சி என்ற நிலையிலே இன்றைக்கு நமது நாட்டில் அரசியல் அமைப்பு உள்ளது. அரசியல் கட்சிகளுடைய அடிப்படையில்தான் நம்முடைய அரசியல் அமைப்பு இன்றைக்கு இருக்கிறது. இருந்தபோதிலும், வித்தியாசங்களைப் பாராமல், தாங்கள், சம நீதியை எல்லோருக்கும் வழங்குவீர்கள், ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கு தாங்கள் ஒரு உதாரண புருஷராக இருப்பீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அந்த முறையில், தாங்கள் ஏகமனதாக இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றதற்காக மறுபடியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உங்களுக்கு . உளமார வாழ்த்துக் கூறி, தங்களுடைய தலைமையில் நடக்கின்ற இந்தச் சபையில் உதவி சபாநாயகராக, வாலிபரும், படித்தவருமான

[திரு. கே. ரமணி] [1989 பிப்ரவரி 8

ஒருவர் வந்துள்ளதையும் நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். அப்படிப்பட்ட முறையில், உங்கள் இருவருக்கும் பாராட்டுதல் களையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திற்குத தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு என் சார்பிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் உங் களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை அழைத்துக் கொண்டு வந்து அமர வைத்தார்கள். அதைப் போலத்தான் என்னையும் அழைத்துக் கொண்டு வந்து அமர வைத்தார்கள். பிரிட்டிஷ் பாராளுமன்ற முறைப்படி அந்த ஆச னத்திற்கு யாருமே வந்து அமருவதற்கு முன் வருவதே கிடையாது. சபாநாயகர் பதவி என்பது அரசிற்கும் அவைக்கும் இடையிலே ஒரு தூதுவனாகப் பணியாற்றக் கூடிய பதவிதான். சுமார் 700, 800 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பிரிட்டிஷ் அரசருக்கும், சபாநாய கருக்கும் ஏற்பட்ட ஒரு சர்ச்சையின் காரணமாகச் சபாநாய கருடைய கழுத்தையே வெட்டி, கொல்லக் கூடிய அந்தத் தீர்ப்பை ஏற்ற பிறகு தான் அந்த ஆசனத்திற்கு யாருமே வந்து அமரு வதற்கு முன்வருவது கிடையாது. முன் மொழிவதற்கும் யாருமே வருவது கிடையாது. வழி மொழிவதற்கும் யாருமே வருவது கிடையாது. ஆகவே எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் முன்மொழிவதும், வழிமொழிவதும் பிரிட்டிஷ் பாராளுமன்ற மரபாக இருந்து வந்திருக்கிறது. முன்மொழிந்தவரும், வழி மொழிந்தவரும், முன்மொழியப்பட்ட சபாநாயகரைத் தோள் மீது கை வைத்து ஒருவர் இன்னொருவர் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து அங்கே அமர வைப்பதற்குக் காரணம் உண்டு. அதுபற்றி, May Dube சொல்லுகிறார்—பக்கம் 29 (Sp aker is India) "The two Members who proposed the name should take him by the shoulder and drag him to the Chair. When questioned by the Queen, the Speaker could tell her that "the Commons had compelled me to take the Chair". அவராகப் போய் அங்கே அமரவில்லை. அந்த அவையே அவரை அங்கே அமர்த்துவதற்கு இழுத்துக் கொண்டு வந்து அமர வைக்கக் கூடிய கட்டாயம் இருப்பதாக May Dube-ஆல் எழுதப் பட்டிருக்கிறது. அப்படி இருக்கக்கூடிய இந்தப் பதவியில் இன் றைக்கு நீங்கள் அமர்த்தப்பட்டிருக்கிறீர்கள். ஒரு நல்ல அனுப வம் கிடைக்கும். இங்கே தன்னிச்சையாக உடனுக்குடன் தீர்ப்பு வழங்கக் கூடிய கட்டாயம் சில சூழ்நிலைகளில் உருவாகும். காரணம், ஒரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பும் போது நான் நாளைக்கு வந்து பதில் சொல்கிறேன் ; நாளைக்கு வந்து தீர்ப்பை வழங்குகின்றேன் என்று சொல்ல முடியாது. தீர்ப்பை வழங்கிவிட்டுத்தான் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். ஆகவே ஆங்கிலத்தில் சொல்கிறார்களே, "பிரசன்ஸ் ஆஃப் மைண்ட்" என்று, அது இந்தப் பதவிக்கு கொஞ்சம் அதிகம் தேவை.

1989 பிப்ரவரி 8] [திரு. பி. எச். பாண்டியன்]

சில நேரங்களில் நடவடிக்கைகள் எடுக்கும் போது, நடவடிக்கைகளில் ஈடுபட்டோருக்கு கொஞ்சம் மனச் சஞ்சலங்கள் ஏற்படும். இங்கே இது மட்டும் அல்ல. இந்த மன்றத்திற்கு அதாவது மத்திய சட்டமன்றத்திற்கு 1854 ஆம் ஆண்டிலிருந்து 1920 ஆம் ஆண்டு வரை கவர்னர் ஜெனரல் தான் தலைமை தாங்கினார். இன்றைக்கு ''கேஸ்டிங் ஓட்'' என்று வழங்கியிருக்கின்றார்களே சபாநாயகருக்கு, அன்றைக்கு கவர்னர் ஜெனரல் தலைமையேற்ற காரணத்தினால், அவருடைய அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்திற்குத் தான் ''கேஸ்டிங் ஓட்டை'' அன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். அதே வாக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய சபாநாயகருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், பாராளுமன்றமானால் பிரதமருக்கும், சபாநாயகருக்கும் சுமுகமான உறவு வேண்டும். சட்டமன்றமானால், முதல்வருக்கும், சபாநாயகருக்கும் சுமுகமான உறவு வேண்டும். சில மாநிலங்களில் இன்றைக்குப் பிரச்சினைகளைப் பார்க்கின்றோம். சில வேறு பட்ட கருத்துக்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. பாராளுமன்றத்தில் கூட ஒரு பொருள் குறித்துச் சபாநாயகர் அனுமதி மறுத்த காரணத்தினால், என்னுடைய நண்பர் திரு. பல்ராம் ஜாக்கர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமே கொண்டு வரப்பட்டு, அவரே பதில் சொல்லாமல் அவைக்கு வராமல் போய் விட்டார். ஆனால் பிரதமர் அவைக்கு வந்து அவருக்காக வாதாடி அவரைக் காப்பாற்றினார். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடித்தார். ஆகவே தான் சொல்கிறேன், நீதி மன்றம், சட்டமன்றம், நிர்வாகம் ஒருங்கிணைந்து செயல்படக் கூடிய ஒரு ஜனநாயகத் தத்துவத்தின் அடிப்படையில் தான் இந்தப் பதவி உருவாக்கப்பட்டு இருக்கிறது.

இங்கே, இன்றைக்குத் தமிழ்க் குடிமகனாக அமர்ந்து இருக்கின்றீர்கள்; தமிழ் படித்து அமர்ந்திருக்கின்றீர்கள்; நான் படித்த பச்சையப்பன் கல்லூரியில் படித்துவிட்டு இங்கே வந்து அமர்ந்து இருக்கின்றீர்கள். ஆகவே, அந்தக் கல்லூரிக்கு ஒரு பெருமை உண்டு. சோடை போவது கிடையாது. நீங்களும் அங்கே படித்திருக்கின்றீர்கள். புகழ் வாய்ந்த கல்லூரி; உரிமைக்காகப் போராடுகின்ற கல்லூரி; வள்ளுவன் சொன்ன அத்தனை குறட் பாக்களையும் ஒருங்கே இணைத்துப் படித்த மாணவர்கள் வாழ்ந்த கல்லூரி; நீங்களும் அங்கே தமிழ் கற்றுவிட்டு இங்கே வந்து அமர்ந்திருக்கின்றீர்கள். அண்ணா அவர்களும் படித்திருக்கின்றார்கள். நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் என்று சொல்வார்கள். நல்ல குடும்பத்திலிருந்து, ஒழுக்கத்தோடு வந்து அமர்ந்து இருக்கின்றீர்கள். சில நேரங்களில் அரசியலில் ஒழுக்கத்தைப் பகுத்துவதற்கு நீங்கள் பாடுபட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் இங்கே வைக்கின்றேன். இந்த மன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க மன்றம். இந்த மன்றத்தில் தமிழ்நாட்டு மக்கள் எத்தனையோ நன்மைகளை எதிர்பார்க்கின்றார்கள். ஆகவே இந்த மன்றத்தில் விவாதிக்கப்படக் கூடிய பொருள்கள்

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 பிப்ரவரி 8

அத்தனையும், மக்களுக்காக, மக்களுடைய வளர்ச்சிக்காக, ஏழை எளிய மக்களுடைய வாழ்வுக்காக, நலன்களுக்காக, முன்னேற்றத்திற்காக அமைவதற்கு உங்களுக்கு என்றைக்கும் துணை நிற்போம். என்றைக்கும் என்னுடைய ஒத்துழைப்பு உண்டு; என்றைக்கும் என்னுடைய கருத்துக்கள் அவைக்கு உண்டு என்பதையும் உங்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் என்னுடைய அனுபவம் உங்களுக்குத் தேவைப்படுகின்ற நேரத்தில் நான் உங்களுக்குச் சொல்வேன் என்பதையும் நான் இங்க தெரிவித்துக்கொள்கிறேன். என் துணை சில நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும். (சிரிப்பு).

(முற்பகல் 10-30)

அடுத்து, துணை சபாநாயகர் அவர்களையும் இந்த நேரத்தில் என் சார்பிலும், கழகத்தின் சார்பிலும் வாழ்த்துகிறேன். அவர் ஒரு வழக்கறிஞர். உங்களுக்கு உறுதுணையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இரண்டு பேருமே ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் பதவிக் காலம் நல்ல முறையில் செயல்பட்ட பணிக்காலமாக அமையட்டும் என்று வாழ்த்தி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஓ. வெங்கடேஸ்வர நீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பாராட்டுக்குரிய துணை சபாநாயகர் திரு. துரைசாமி அவர்களே, அங்கத்தினர்களே, இன்றைய தினம் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. தமிழ்க்குடிமகன் அவர்கள் பேராசிரியராகப் பணியாற்றி, கல்லூரியினுடைய முதல்வராகவும் பணியாற்றியவர். சட்டசபையிலும் சபாநாயகராகப் பணியாற்றுவதற்கும் இந்தத் தமிழ்க்குடிமகனை மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், சரியான முறையில் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்தப் பதவியானது சாமான்யப்பட்ட பதவியல்ல. உயர்நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ அந்த அளவுக்குப் பொறுப்பு வகிக்கக் கூடிய ஒரு ஸ்தானம் இது. சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற வரை தான் ஒரு கட்சிக்குச் சொந்தமானவர். சபாநாயகர் என்று வந்துவிட்ட பிறகு எல்லா அங்கத்தினர்களையும் அணைத்துக் கொள்ளக்கூடிய ஒரு சக்தி வாய்ந்த பதவி, இந்தப் பதவி. இந்தப் பதவியை அலங்கரிக்கக் கூடிய தங்கள் பின்னால் பணியாற்றப் போகும் நிலையைக் கொண்டு தான் இந்தப் பதவி பிரகாசிக்கும். சிலர் இந்தப் பதவியால் பிரகாசிப்பார்கள். இப் பதவி, சிலரால் பிரகாசிக்கும். இங்கே பணியாற்றும்போது எத்தனையோ பிரச்சினைகள் நடுவிலே வரும். 234 அங்கத்தினர்களும் பல கட்சியைச் சார்ந்தவர்கள். இதில் தீர்ப்பு வழங்கும் பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது. அதே நேரத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், மாற்றுக் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள் ஆகியோருக்குக் குறையில்லாமல் தீர்ப்பு வழங்க வேண்டிய பொறுப்பு, தங்களுக்கு இருக்கிறது. இன்னும்

1989 பிப்ரவரி 8] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

ஐந்தாண்டுகள் இருக்கின்றன-ஓராண்டல்ல, இரண்டாண்டு அற்ல, ஆட்சியில் எத்தனையோ கஷ்ட நிஷ்டூரங்கள் இருக்கும். தாங்கள் யாதவ குலத்தில் பிறந்தவர்கள், ஜனங்களுக்கு எப்போதெல்லாம் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுகின்றனவோ அந்த நேரத்திலெல்லாம் கிருஷ்ண பகவான் உதவி செய்ய சித்தமாக இருந்தார். அதற்கெல்லாம் நிறைய ஸ்லோகங்கள் இருக்கின்றன. அதுபோல, இந்த மன்றத்தில் தாங்கள் நல்ல பெயர் எடுத்து, மன்றத்தின் பெயரையும் சிறப்பிக்கச் செய்ய வேண்டுமென்று சொல்லி, தங்களுக்கு தீர்க்காயுசையும், நல்ல திடகாத்திரமான சரீரத்தையும், நோயற்ற வாழ்க்கையையும், எல்லாம் வல்ல, எங்கள் சூரிய வம்சத்தால் பூசை பண்ணப்பட்ட அரங்கநாதப் பெருமாள் அளிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து, முடித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, ஒன்பதாவது சட்டப் பேரவைக்கு ஏகமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற தங்களுக்கு நான் சார்ந்திருக்கின்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பேரவையினுடைய கடந்த காலத்தினுடைய சரித்திரத்தில் சிறப்புமிக்க தலைவர்கள் பேரவைத் தலைவரின் ஆசனத்தை அலங்கரித்து, பல்வேறு முறைகளில் சிறப்பாக நடத்தியிருக்கின்ற நல்ல அனுபவங்களையும், சில நல்லவை அல்லாத அனுபவங்களையும் தெரிந்து, வரக்கூடிய காலத்தில், ஒரு கல்லூரியினுடைய பேராசிரியராக இருந்த தாங்கள், கல்லூரியில் பல்வேறு கருத்துள்ள மாணவர்களையெல்லாம் அரவணைத்து, சிறப்பாக கல்லூரி நடத்துவதிலே நல்ல அனுபவமுள்ள தாங்கள், இந்தச் சபையில் இருக்கின்ற உறுப்பினர்கள், அவர்களுடைய கருத்துக்களை, அவர்கள் தொகுதிகளினுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு நல்ல சந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக எதிர் வரிசையிலே இருக்கக்கூடியவர்களுக்கு எதிர்க் கட்சியிலே இருக்கக்கூடியவர்களுக்கு கூடுதலான வாய்ப்புகள் அளித்து, கடந்த காலத்தினுடைய நல்ல உதாரணங்களை மேற்கொண்டு, இந்தச் சபையையும் சிறப்பாக நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையோடு, அப்படி நடத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து, எங்களுடைய கட்சியின் சார்பிலே வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களுக்குத் துணையாக, சட்டத் துறையிலே பயிற்சி பெற்று மாண்புமிகு துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு. பி. துரைசாமி அவர்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், எங்களுடைய உறுப்பினர்களுடைய சார்பில் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் கூறி அமர்கிறேன்.

[1989 பிப்ரவரி 8

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழகத்தினுடைய இந்தச் சட்டப் பேரவைக்குத் தலைமை ஏற்று நடத்துகிற ஒரு சிறப்புக் குறிய பொறுப்பு, இன்றைக்கு தமிழகத்தினுடைய அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த மன்றம், பாரத நாட்டிலே மிகப் பழமை வாய்ந்தது, தொன்மை வாய்ந்தது என்பது நாடறிந்த ஒன்றாகும். மிகச் சிறப்புக்குரிய பெருமக்கள், நீங்கள் வீற்றிருக்கின்ற இந்த இருக்கையை அலங்கரித்திருக்கிறார்கள். திரு. சிவசண்முகம் பிள்ளை போன்றவர்கள், தமிழ் ஆர்வமும், புலமையும் பெற்ற திரு. சி. பா. ஆதித்தனார் போன்றவர்கள், புலவர் கோவிந்தன் போன்றவர்கள் எல்லாம் இந்த இருக்கையில் அமர்ந்து இந்த அவையினுடைய கண்ணியத்தினை உயர்த்திடும் வகையிலும், ஜனநாயக மரபுகளைக் காத்திடும் வகையிலும், நாடும் ஏடும் போற்றிடும் வகையிலும் நடத்திச் சென்றிருக்கிறார்கள். தமிழ் ஏற்றம் பெற்றிருக்கிற—தமிழ் மீண்டும் ஏற்றம் பெற்றிருக்கிற—இன்றைக்கு, 'தமிழ்க் குடிமகன்' ஆகிய நீங்கள், இந்த அவையின் தலைவராக ஏற்றம் பெற்றிருப்பது, தமிழ் ஏற்றம் பெற்றிருப்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். எனவே, தமிழ்க் குடிமகன் என்று சிறப்புப் பெயரைப் பெற்ற நீங்கள், தமிழ்க் குடி உயர்ந்திடும் வகையிலும், ஆண்டாண்டுக் காலமாகத் தமிழகம் போற்றிப் பாராட்டி வருகிற நம்முடைய மரபுகள் காப்பாற்றப்படும் வகையிலும், எதை இழந்தாலும், தமிழனுக்குரிய மகத்தான் பண்பாடு, கண்ணியம் இவைகளை எங்கேயிருந்தாலும், எத்தகைய சூழ்நிலையிலும் அந்தத் தமிழ்க் குடி இழந்துவிடவில்லை என்பதற்கு நீங்கள் இந்தச் சபையை நடத்திச் செல்கின்ற முறை உலகத்திற்கு மீண்டும் விளக்கம் தரும் வகையில் அமையும் என்று நான் நம்புகிறேன்.

(முற்பகல் 10—40)

உங்களுடைய பணி எவ்வளவு கடினமானது என்பதை நாங்களெல்லாம் அறிவோம். சட்டமன்றத்திற்கு இன்றைக்கு நீங்கள் புதிதாக வந்திருக்கிறீர்கள். புதிதாக வந்த நீங்கள் பல தடவை வந்தவர்களை, தலைமையேற்று நடத்துவதற்கு தேர்வு பெற்றிருக்கிறீர்கள் என்று சொன்னால், சட்டமன்றத்தில் தலைமை யேற்று நடத்துவதற்கான பக்குவமும் பயிற்சியும் இங்கேதான் கிடைக்கும் என்பதல்ல. தமிழன் எங்கெங்கு பாங்காகப் பயிற்சியைப் பெறமுடியுமோ அந்த இடங்களில் பயிற்சியைப் பெறுகிறான். அப்பயிற்சியைப் பெற்றவர்களை விட பல தடவைகள் சட்டமன்றத்திற்கு வந்தவர்களைப்பக்குவமாக நடத்திச் செல்ல முடியும் என்கின்ற அடிப்படையிலேதான் சட்டமன்றத்திற்கு முதன்முதலாக வந்த நீங்கள் இன்றைக்கு இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள். பட்டிமன்றங்களையெல்லாம் நடத்தி, நீங்களே ஒரு பட்டிமன்றமாக, நடுவர் என்ற நிலையில் பல நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியிருப்பதன் வாயிலாக அந்த அனுபவங்களும் இங்கே பயன்படும் என்பதை அவை முன்னவர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். இந்த இடம் சொற்போர் நடத்து

1989 பிப்ரவரி 8] [திரு. எம். அப்துல் லத்தீப்]

கின்ற இடம் தான், மற்போர் நடத்துகின்ற இடமாக ஒரு காலத்திலே இந்த இடத்தை யார் நினைத்தாலும் அதற்கு நீங்கள் அனுமதி வழங்கமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது.

தமிழகத்தினுடைய வரலாற்றில், சென்னை சட்டமன்றம் என்று சொன்னால், அது சென்னை ராஜதானி சட்டமன்றமாக இருந்தாலும், தமிழ்நாடு சட்டமன்றமாக இருந்தாலும், சிறந்த உதாரணங்களை, சிறந்த தீர்ப்புகளை ஏனைய சட்டமன்றங்கள் எல்லாம் அதனுடைய வழிகாட்டுதலுக்காக அவர்கள் பெற நினைத்தால், நம்முடைய குறிப்பேடுகளைத்தான் அவர்கள் தேடுவார்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். எனவே, அந்த வகையில் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்ற நிலைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, நீங்கள் இன்றைக்கு ஒரு நடுநிலையிலே அமர்த்தப்பட்டிருக்கிறீர்கள், சபாநாயகராக. நம்முடைய நாட்டிலே கடவுளுக்கே சபாநாயகம் என்றுதான் சொல்லுவார்கள். எனவே, போற்றுபவர்கள் யார், தூற்றுபவர்கள் யார் என்றெல்லாம் பார்க்காமல் சபாநாயகமாக இருந்து வழி நடத்திச் செல்லக்கூடிய ஒரு மகத்தான பக்குவத்தைப் பெற்றிருக்கக்கூடிய ஒரு பெருமகன் நீங்கள் என்பதை நாடு அறிந்திருக்கிறது. அதுவும் ஆசிரியராகப் பணியாற்றியவர்கள், அதுவும் இந்தக் காலத்தில் ஆசிரியராகப் பணியாற்றியவர்கள், அதுவும் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றியவர்கள், அதுவும் கல்லூரியிலே கல்லூரி முதல்வராகவும் இருந்து பணியாற்றியவர்கள். ஒரு நாட்டை ஆள்பவரைவிட மகத்தான திறமையைப் பெற்றவராக இருக்க வேண்டும். ஒரு நாட்டையே ஆண்டுவிடலாம் ஆனால் ஒரு கல்லூரியை நிர்வகிப்பது என்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை என்னைப் போன்றவர்கள் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். எனவே, நீங்கள் கல்லூரி முதல்வராகவே இருந்து வெற்றி பெற்றிருக்கிறீர்கள் என்று சொன்னால், இந்த அவையில் எப்படி நடந்து கொள்வீர்கள், எப்படி இந்த அவையை நடத்தவேண்டும், எப்படி அதனுடைய கண்ணியத்தைக் காக்கவேண்டும் என்பதெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, உங்களுக்கு நான் என்னுடைய சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுங்கட்சிக்கு எவ்வளவு பொறுப்பிருக்கிறதோ, அதே பொறுப்புதான் எதிர்க்கட்சிக்கும் இருக்கிறது. ஆளுங்கட்சிக்கு எவ்வளவு உரிமையிருக்கிறதோ, அதே உரிமைதான் எதிர்க்கட்சிக்கும் இருக்கிறது. எதிர்க்கட்சிக்கும், ஆளுங்கட்சிக்கும் இடையே இருக்கின்ற இடைவெளி இந்த மேசைதான் என்ற அளவுக்கு நாட்டில் மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற வேண்டும். சபையினுடைய கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும் என்று சொன்னால் அது ஆளுங்கட்சிப் பொறுப்பு மட்டுமல்ல, Shadow Cabinet என்று சொல்லக்கூடிய அளவுக்கு, ஜனநாயகத்தால் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளுக்கும் அந்தப் பொறுப்பு

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 8

உண்டு என்பதை நாங்கள் எல்லாம் உணர்ந்திருக்கிறோம் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எனவே, அந்தத் தரப்பில் மட்டுமல்லாமல், இந்தத் தரப்பில் இருந்தும் தங்களுக்கு முழு ஒத்துழைப்புக் கிடைக்கும். இந்த இருக்கையினுடைய கண்ணியம் நிச்சயம் காப்பாற்றப்படும். கண்ணியத்தை நீங்கள் காப்பாற்றுவதற்கு நாங்கள் எப்போதுமே துணையிருப்போம். கண்ணியத்தை காப்பாற்றுவதுதான் எங்களுடைய கண்ணியத்தைக் காப்பாற்றவும் வழிவகுக்கும். அது எங்களுடைய கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்கு ஒப்பாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நாங்கள் எப்போதும் நிலைநாட்டுவோம். இந்த ஏற்றத்தைப் பெற்றிருக்கின்ற உங்களுடைய ஏற்றத்தை, தமிழ் பெற்ற ஏற்றமாக, தமிழ்க்குடி பெற்ற ஏற்றமாக, தமிழ்நாடு பெற்ற ஏற்றமாகக் கருதி உங்களை நான் வாழ்த்துகிறேன்.

உங்களுக்குத் துணையாக வந்திருக்கின்ற, என்னுடைய அருமை நண்பர் வழக்கறிஞர் திரு. பி. துரைசாமி அவர்கள் உங்களுக்குத் துணையாக, துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஒன்பதாவது சட்டமன்றத்தில் தங்களைச் சபாநாயகராகப் பெற்றிருக்கின்றோம். இந்த மன்றத்தில் ஒருமனதாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றீர்கள். தமிழக் குடியினுடைய வாழ்வுக்காக, வளத்திற்காக, இங்கே சட்டம் இயற்றுவதற்கும், நல்ல பல திட்டங்களைக் கொண்டு வருவதற்குமான இந்தச் சபையில் தமிழ்க் குடிமகனாக நீங்கள் வந்து இந்த மன்றத்தினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்றீர்கள்.

எனக்கு முன்னால் இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மன்றத்தினுடைய வரலாற்றுச் சிறப்பு பற்றியும், மரபுகளை, பெருமைகளை, பாரம்பரியப் பெருமைகளைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். அந்த மரபுகளையும், பாரம்பரியப் பெருமைகளையும் காக்கின்ற, காத்து நடத்துகின்ற பொறுப்பு, மாபெரும் பொறுப்பு உங்களுக்கிருக்கிறது என்பதை நாங்கள் அறிகின்றோம்.

சாதாரணமாக கட்சிகள் என்பது மட்டுமல்லாமல், சிறிய கட்சி, பெரிய கட்சி என்பது மட்டுமல்லாமல், தனிப்பட்ட ஒரு உறுப்பினருடைய உரிமைகளைக் கூடப் பாதுகாக்கின்ற பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் அறிவோம். அந்தப் பொறுப்பை சிரோடும், சிறப்போடும் நீங்கள் நடத்துவீர்கள் என்கின்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு. அந்த வகையில் உங்களுக்குத் துணை புரிவதற்கு, இந்தப் பாரம்பரியப் பெருமைகளைப் பாதுகாப்பதற்கு என்றைக்கும் நாங்கள் துணை நிற்போம்

1989 பிப்ரவரி 8] [திரு. பொன். விஜயராகவன்]

என்று உறுதி கூறிக்கொண்டு, உங்களுக்குத் துணையாக இருக்கக் கூடிய துணைத் தலைவர்களையும், உங்களையும் என சார்பிலும், நான் சார்ந்திருக்கின்ற தமிழக ஜனதாக் கட்சியி னுடைய சார்பிலும் வாழ்த்தி, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவ ரவர்களே, இன்றைய தினம் தமிழ்ச் சமுதாயமானது தமிழாய்ந்த தமிழறிஞர் தமிழகத்தின் முதலமைச்சராக வர வேண்டுமென்று எண்ணியது. அந்த எண்ணம் நிறைவேறியிருக்கிறது. அந்தத் தமிழாய்ந்த தமிழறிஞர், தமிழகச் சட்டப்பேரவைக்குத் தமிழறிந்த ஒரு தமிழ்ச் சான்றோர் அவைத் தலைவராக வர வேண்டுமென்று எண்ணினார். அதுவும் நிறைவேறி இருக்கிறது.

என்னைப் பொறுத்த வரையில் தமிழாய்ந்த தமிழறிஞர் முதல்வராகவும், தமிழறிந்த சான்றோர் சபைத் தலைவராகவும் இங்கே வீற்றிருக்கின்ற காட்சியைக் காணும்போழுது, தமிழித் தாயும், தமிழ் மொழியும் இங்கே சபையிலே வீற்றிருப்பதுபோன்ற ஒரு நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. காரணம் இது தமிழ்நாடு. தமிழ் மொழியின் சிறப்பைக் கொண்ட இந்தச் சட்டப் பேரவை யினுடைய நாயகராகத் தமிழ்க்குடிமகனாக விளங்குகின்ற நீங்கள் இந்தப் பொறுப்பினை ஏற்றிருப்பது சாலச் சிறந்ததாகிறது. எனவே, இன்றைய தினம் தமிழகச் சட்ட சபை வரலாற்றில் பல் வேறு சிறப்புக்களைக் கொண்ட, வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்ட சபைதான் இந்தத் தமிழகச் சட்டப் பேரவை என்றால் அது மிகையாகாது.

கடந்த காலத்தில் இந்தச் சட்டப் பேரவையினுடைய மரபு கள், இந்தச் சபையை அலங்கரிக்க சபாநாயகர்கள் எந்த அள விற்குச் சீரோடும் சிறப்போடும் போற்றிப் பாதுகாக்கப்பட்டதோ, அதேபோன்ற பண்புகளை, மாண்புகளை நீங்கள் நிச்சயம் இந்தச் சபையில் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக் கிறது.

இங்கே நமது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள், முதன்முதலில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள் புதிய சபாநாயகராக இங்கே வந்திருக்கிறீர்கள் என்று. இங்கே என்னைப் பொறுத்த வரையில் கூறுகிறேன், நான் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவன். இங்கே இருக்கின்ற சபாநாயகர் அவர்கள், அடக்கத்தின் உருவமாக, எளிமையின் வடிவமாக இங்கே திகழ்ந்தாலும், இந்தச் சபையை அடக்கி ஆளுகின்ற திறன் அவர்களுக்கு உண்டு என்பதை நான் பல்வேறு பட்டிமன்றங் களில் நேரடியாகப் பார்த்தவன் என்ற காரணத்தினால், பல்வேறு வாக்குவாதங்களை, காரசாரமான வாக்குவாதங்களையெல்லாம் சட்டமன்றத்தைப் போல், நீதிபதியின் முன்பு வழக்குரைஞர்கள் வாதாடுகின்றதைப் போல வாதாடுகின்ற பல்வேறு நிகழ்ச்சி களையெல்லாம் அவர்கள் தலைமையில் நான் பார்த்திருக்கின்ற

[திரு. பி. என். வல்லரசு] [1989 பிப்ரவரி 8

காரணத்தினால், அவர்களுக்கு இது புதிய அனுபவம் இல்லை என்பது என்னுடைய எண்ணம். நிச்சயமாக, நீதிபதிகள், தலைமை நீதிபதி அவர்கள் எப்படி இருதரப்பு வழக்கறிஞர்களுடைய வாதங்களையும் பெற்று அனுபவம் பெற்றிருக்கின்றார்களோ அதேபோன்று தாங்கள் வழக்காடு மன்றங்களிலே பல்வேறு வாதங்களைப் பெற்றிருக்கின்ற காரணத்தினாலே நடுவராக இருந்து தீர்ப்புக் கூறியிருக்கின்ற காரணத்தினால் நிச்சயம் இந்த அவைக்கு மிகப் பெரிய சிறப்பையே கொடுக்கக் கூடிய ஒரு அவைத் தலைவராகத் திகழ்வீர்கள் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது.

(முற்பகல் 10.50)

இங்கே பேசிய முன்னாள் சட்டப் பேரவையினுடைய தலைவர் என்னுடைய அனுபவத்தையும் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அந்த இடத்தில்தான் எனக்கு ஒரு சந்தேகம், இங்கே வானளாவிய அதிகாரம் இருக்கிறது என்று கூறி, இந்தச் சட்டமன்றத்திற்கும், இங்கேயிருக்கின்ற நீதி மன்றத்திற்கும் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தாத அளவிற்கு நமது அன்பிற்கும் பாசத்திற்கும், வணக்கத்திற்குமுரிய மாண்புமிகு அவைத் தலைவர் நிச்சயம் ஒரு தலைசிறந்த சபாநாயகராக விளங்குவார்கள். சபாநாயகர் காலத்தில், குறிப்பாக தமிழகச் சட்ட மன்ற வரலாற்றில் தமிழ்க்குடிமகன் அவர்களுடைய காலம் தமிழன் பொற்காலம், சபாநாயகர்காலம் பொற்காலம் என்கின்ற அளவுக்கு நீங்கள் நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களுக்கு உறுதுணையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற உதவிச் சபாநாயகர் திரு. துரைசாமி அவர்களையும் உங்களையும் நான் சார்ந்திருக்கின்ற தமிழ்நாடு பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் வாழ்த்தி, பாராட்டி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவையினுடைய மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழை வாழ்த்துவதுபோல உங்களை வாழ்த்துகின்ற பேறு பெற்றமைக்காக நான் பெருமையடைகின்றேன். இந்த அவைக்கு தமிழ்க்குடிமகன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சாலப் பொருத்தமுடைய ஒன்றாகும். அவையின் முன்னவர், கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல தங்களுடைய தேர்வுக்கும் துணைத் தலைவருடைய தேர்வுக்கும் எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள அனைவரும் ஒத்துழைத்து, போட்டியின்றி இருவரையும் தேர்ந்தெடுத்த நல் மரபிற்காக அவர்கள் அனைவரையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அவை தொன்மை வாய்ந்த, புகழ் செதுக்கிய ஒரு அவையாகும். இதற்குப் பேரவை என்று இன்றைக்குப் பெயர் இருந்தாலும் கூட தொடக்க காலத்திலே கவுன்சில் என்கின்ற பெய

1989 பிப்ரவரி 8] *[டாக்டர் மு. கருணாநிதி]*

ரோடுதான் இந்த அவை உருவாக்கப்பட்டது. 1919 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு இரட்டை ஆட்சி முறை என்று சொல்லப்படுகின்ற 'டயார்க்கி' முறையைக் கொண்டுவந்தபோது இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாமல் இரண்டே மாநிலங்களில்—நம்முடைய மாநிலத்திலும், பஞ்சாப் மாநிலத்திலும் அந்த ஜனநாயகப் பரிசோதனையைச் சந்திக்க முன்வந்த நிகழ்ச்சி வரலாற்று நிகழ்ச்சி.

அதில் சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் (அப்போது சென்னை மாகாணம் என்றுதான் பெயர்) ஜஸ்டிஸ் கட்சியும், பஞ்சாப் மாநிலத்தில் யூனியனிஸ்ட் கட்சியும் இந்த ஜனநாயகப் பரிசோதனையிலே இறங்கின. அந்தப் பரிசோதனையில் இங்கே ஜஸ்டிஸ் பார்ட்டி என்று அழைக்கப்படுகின்ற நீதிக் கட்சி பெரும்பான்மை பெற்று, கவுன்சிலை அமைத்தது. அப்படி முதன்முதலாக சென்னை மாநிலத்திலே கவுன்சில் உருவாவதற்கும் ஜனநாயகப் பரிசோதனை நடத்துவதற்கும் அன்றைக்கு முன்னோடியாக இருந்தது திராவிடர் இயக்கம் என்பதை எண்ணும்போது நான் பெருமையடைகிறேன் ; பேருவகை கொள்ளுகிறேன் ; பெருமிதம் பெறுகிறேன். அந்த நேரத்திலேதான் சென்னை மாகாணத்தினுடைய கவர்னராக லார்டு வெல்லிங்டன் என்பவர் இருந்தார். அவர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினுடைய ஸ்பீக்கர் பிராண்ட் என்பவருடைய பேரன் ஆவார். சபாநாயகர் நாற்காலியின் நிழலிலேயே வளர்ந்தவர் என்கின்ற சிறப்புக்கு உரியவர் அவர்.

1921 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதி, சற்றொப்ப 68 ஆண்டுகளுக்கு முன்பு கென்னாட் கோமகன் 'டியூக் ஆஃப் கென்னாட்' என்று அழைக்கப்படுகிறவர் புதிய அரசியல் சட்டத்தைத் தொடங்கி வைத்தார். அன்றைய சென்னை மாகாண சட்டசபை அனைத்து ஜனநாயகவாதிகளுடைய பாராட்டையும் பெற்றதாக விளங்கியது. அந்தச் சட்டசபையினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்திய வருடைய நடுநிலை, ஜனநாயக மாண்பு இவைகளை எல்லாம் பாராட்டி,—நாடாளுமன்றங்களுடைய தாய் என்று சொல்லப்படுகிற பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் சட்டங்களை, திட்டங்களையெல்லாம் செவ்வனே அது கடைப்பிடிக்கின்றது என்கின்ற பாராட்டிற்கெல்லாம் அந்த அவை அன்றைக்கு உரியதாக விளங்கியது—அதன் விளைவாகத்தான் 1922 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் ஆறாம் நாள் லார்ட் வெல்லிங்டன் அவர்களும், லேடி வெல்லிங்டனும் சேர்ந்து இந்த அழகான நாற்காலியை இந்த அவைக்குப் பரிசாகத் தந்தார்கள். அப்படி பரிசாகத் தந்தபோது வெல்லிங்டன் பேசிய வார்த்தைகள் கோடிட்டு வைத்துக் கொள்ளப்பட வேண்டியதும் சபாநாயகர்களாக வருபவர்கள், அவையிலே உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் என்றென்றும் தங்கள் நெஞ்சில் பதிய வைத்துக்கொள்ள வேண்டியதுமான வார்த்தைகளாகும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 8

Lord Wellington said " I realise the enormous advance that has been made in the conduct of the proceedings of the Legislative Council. I find that all your proceedings are carried out with all the customs and habits of Parliamentary procedure in the House of Commons. It is my most sincere hope that all those who succeed you and sit in the Chair may uphold in the highest degree, the dignity and prestige of the Madras Legislative Council and I trust that they will always conduct the affairs with their decisions good Judgement and tact which have so eminently charactarised your conduct of affairs.

அதாவது பேரவையின் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நான் உணர்கிறேன். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தினுடைய சம்பிரதாயத்தையும், நடைமுறைகளையும் நீங்கள் கடைப்பிடிக்கிறீர்கள் என்று அறிகிறேன். உங்களுக்குப் பிறகு உங்களைத் தொடர்ந்து இந்த ஆசனத்தில் அமரப் போகிறவர்கள் இந்தச் சென்னை சட்டப் பேரவையின் மித உன்னதமான கவுரவத்தையும், கண்ணியத்தையும் கட்டிக் காப்பார்கள் என்றும், இதுவரை இந்தச் சபையின் நடவடிக்கைகள் எப்படித் திறமையாக நடத்தப்பட்டதோ அது போலவே இனியும் இச்சபையை புத்தி கூர்மையான தீர்ப்புகள் மூலமும், தீர்க்கமான முடிவுகள் மூலமும் அவையை நடத்திச் செல்வார்கள் என்றும் நம்புகிறேன். இவ்வாறு 67 ஆண்டுகளுக்கு முன்பே அந்த கவர்னர் எடுத்துக் கூறி இருக்கிறார். ஆங்கில ஏகாதிபத்தியத்தை நாம் விரட்டியடித்து விட்டோம் என்றாலும் கூட அந்த மரபுகள், அவர்கள் கடைப்பிடித்த ஜனநாயக மாண்புகள் இவைகளை நாம் என்றைக்கும் போற்றத் தவறியது இல்லை என்ற காரணத்தினால்தான் இதை இங்கே நான் சுட்டிக் காட்டினேன்.

தாங்கள் பெரும் புலவர் என்கின்ற வகையில் தமிழகத்திலே அறிமுகம் ஆனவர். அதுமாத்திரமல்ல; யாதவர் கல்லூரியினுடைய முதல்வராக இருந்து, நம்முடைய எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல அந்தக் கல்லூரியைச் சிறப்புற நடத்தி மேன்மை பெற்றவர்.

10 ஆண்டுகளுக்கு முன்பு (1979-ல்) தாங்கள் முதல்வராக வீற்றிருந்த யாதவர் கல்லூரிக்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். ஆளும் கட்சியின் சார்பாக அல்ல; எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவனாக அழைக்கப்பட்டிருந்தேன். அப்போது நான் மேடையிலே அமர்ந்தபிறகு உங்களுக்கு விருப்பமான தலைப்பிலே பேசலாம் என்று பணித்தீர்கள். நான் அன்று பேசிய அந்த வாசகத்தை இங்கே நினைவுகூர விரும்புகிறேன். "நீண்ட உரைக்குத் தலைப்பு எதுவாக இருக்கலாம் என்று மேடையில்

1989 பிப்ரவரி 8] *[டாக்டர் மு. கருணாநிதி]*

இருந்தவாறு நான் யோசித்தேன். தலைப்பு தமிழ்க்குடிமகன் என்பதுதான். தமிழ்க்குடிமகன் பழங்காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகை நிலங்களைப் பிரித்துக்கொண்டு அந்த நிலங்களுக்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, வாழ்வு நெறியை உருவாக்கிக்கொண்டு வாழ்ந்தவன்.

(முற்பகல் 11—00)

அந்தத் தமிழ்க்குடிமகன் உலகத்திற்கே பண்பாடுகளைக் கற்றுத் தரும் ஆற்றல் பெற்றிருந்தவன். உலகத்தோடு வாணிபத் தொடர்பு கொள்ளும் அளவுக்குத் திறன் படைத்தவனாக இருந்தவன். அந்தத் தமிழ்க்குடிமகன், தமிழகத்தில் விளைவித்த செல்வங்களை கிரேக்கம், யவனம் போன்ற வெளி நாடுகளுக்கு அனுப்பி வைத்து, வெளிநாட்டிலிருந்து வருகின்ற பொருள்களைத் தங்களுடைய நாட்டுத் துறைமுகத்தில் இறக்குமதி செய்து அவைகளைத் தமிழ் மக்களுக்குத் தருகின்ற வாணிப வேந்தனாக விளங்கியவன். கடாரம் கொண்டான், இலங்கை வென்றான் என்ற வரலாற்று வேந்தனாகத் தமிழ்க்குடிமகன் திகழ்ந்தான். அப்படித் திகழ்ந்த தமிழ்க்குடிமகன் இடைக் காலத்தில் ஏற்பட்ட சில அல்லல்களால், சோதனைகளால், சில குறுக்கீடுகளால், தமிழ்க்குடிமகன் என்ற பெயரையே இழந்தான். அந்தப் பெயர் யாதவர், மூக்குலத்தோர், வன்னியர், முதலியார், செட்டியார், பிள்ளை என்ற இப்படிப் பல பெயர்களாக மாறின. பல பெயர்களாக மாறினாலும் அவன் தமிழ்க்குடிமகன் தான். எப்படிக் கண்ணனை கிருஷ்ணன் என்றும் பரமாத்மா என்றும், பரந்தாமன் என்றும், வேணுகோபாலன் என்றும், விஷ்ணு என்றும்—யாதவர் கல்லூரியில் பேசியதால் அப்போது இந்த உவமையைச் சொன்னேன்—யாதவர்களும், வைணவர்களும் பல பெயரிட்டு அழைக்கிறார்களோ, அதைப் போலத்தான் தமிழ்க்குடிமகனைப் பல பெயரிட்டு அழைக்கிற நிலைமை தமிழகத்திலே ஏற்பட்டது' என்று அன்றைக்கு நான் குறிப்பிட்டேன். தமிழ்க் குடிமக்களுக்காக அமைந்துள்ள இந்த ஆட்சியில் தமிழ்க்குடிமகனாகிய தாங்கள் இந்தப் பேரவைக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பது மிக மிகப் பொருத்தமானதாகும்.

பட்டிமன்றங்களிலே நீங்கள் தலைமை ஏற்று நல்ல தீர்ப்புகள் பலவற்றை வழங்கியது குறித்து இங்கே எடுத்துச் சொன்னார்கள். பட்டிமன்றங்களிலே தலைவர் தீர்ப்பு வழங்குகிற நேரத்தில் அவையிலே உள்ளவர்களைப் பார்த்து உங்களுடைய தீர்ப்பு என்ன என்று அவர்களையெல்லாம் கேட்டு, அவர்கள் கையொலி மூலமாகவோ அல்லது கைகளைத்தூக்கி உயர்த்திக் காட்டுவதன் மூலமாகவோ அவர்களின் கருத்துக்களை அறிந்து அந்தக் கருத்துக்களுக்கு ஏற்ப தீர்ப்பு வழங்குவது பட்டிமன்றத்திலே ஒரு மரபு.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 8

அதைப்போல இங்கே சில நேரங்களிலே தீர்ப்பு வழங்க வேண்டிய அவசியம் தங்களுக்கு ஏற்படும். சில நேரங்களில் தாங்களே எது சரி, எது தவறு என்று சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பு வழங்க வேண்டிய நிலைமையும் தங்களுக்கு ஏற்படும். அப்படி ஏற்படும்போது எதிர்க்கட்சிகளின் சார்பாகவும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். தவறு ஆளும் கட்சியின் பக்கம் இருந்தாலும், நீங்கள் கண்டிப்பாக நடந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக உண்டு. இப்படிச் சொல்வதன் காரணமாக எதிர்க்கட்சியிலே உள்ள அருமைத் தலைவர்களுக்கு எந்த விதமான அச்சமும், தங்களுடைய தீர்ப்பைப் பற்றி இருக்கத் தேவையில்லை என்பதை நான் இங்கே ஆளும் கட்சியின் சார்பாக உறுதி அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் அவர்களே, தாங்கள் நடத்திய பத்திரிகைகளுடைய பெயர்களை நான் பார்த்தேன். ''தென்மொழி'', ''அறிவு'', ''கைகாட்டி'' என்று மூன்று பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்திருக்கிறீர்கள். எனவே, இந்த அவையிலே தென்மொழிதான் முழங்கும். தென் மொழிகளிலே முதல் மொழியாம் தமிழ் மொழிதான் முழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அறிவு என்ற ஏடு நடத்தியிருக்கிறீர்கள். உங்கள் தீர்ப்பெல்லாம் அறிவார்ந்த தீர்ப்பாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. கைகாட்டி என்ற பத்திரிகையை நடத்தியிருக்கிறீர்கள். இந்த அவையிலே கேள்வி நேரத்தில் கைதூக்குகின்றவர்கள் பக்கமெல்லாம் திரும்பிப் பார்த்து, அவர்களுக்கெல்லாம் நீங்கள் நல்ல வாய்ப்புக்களை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எனவே இந்த அவையினுடைய மாண்பை காப்பாற்றக்கூடிய தமிழ் மகனாக தமிழ்க்குடிமகனாகப் பொறுப்பேற்றிருக்கிற உங்களை, என் சார்பிலேயும், இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலேயும் வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன்.

அதைப்போலவே இந்த அவையின் துணைத் தலைவராக பொறுப்பேற்ற வழக்கறிஞர் துரைசாமி அவர்களுக்கும் என் சார்பிலும், இந்த அவையின் உறுப்பினர்கள் சார்பிலும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு, தங்களுக்கு எங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் என்றென்றும் இருக்கும் என்ற உறுதியை வழங்குகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. பி. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திற்குத் துணைத் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்தமைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தினுடைய மரபுகளையும், பெருமைகளையும் கட்டிக் காப்பதோடு, துணைத் தலைவராக இருந்து எனது கடமைகளை விருப்பு வெறுப்பின்றி நிறைவேற்று

1989 பிப்ரவரி 8] [பேரவைத் துணைத் தலைவர்]

வேன் என்றும் பேரவைத் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து என் பணிகளைச் செம்மையாக ஆற்றுவேன் என்றும் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, பேரவை முன்னவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் பெருமக்களே, இந்த அவையில் அமர்ந்திருக்கிற சட்டப்பேரவை உறுப்பினர்களே, உங்கள் அனைவருடைய ஒருமுகமான பாராட்டுதல்களோடு சட்டப் பேரவைத் தலைவர் என்ற பொறுப்பிலே நிற்கிற நான் உங்கள் பாராட்டு மொழிகளை ஏற்று, நெஞ்சிலே பதித்து, ஒரு நிலையான அரசை நடத்திக் காட்டவும், மிகச் சிறந்த கண்ணியத்தை நிலை நிறுத்தவும் தமிழ்க்குடிமகன் என்ற முறையில் பொறுப்பு ஏற்கிறேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாராட்டிய பெருமக்களுக்கு எல்லாம் நன்றி தெரிவிக்கிற அதே நேரத்தில், இந்தப் பேரவைத் தலைவருக்கான தேர்தல் நடைபெறுகிற போது ஆளும் கட்சி சார்பில் முன்மொழியப் பட்டாலும் கூட, எதிர்க் கட்சியில் இருக்கிற பெருமக்கள் அனைவரும் தமிழ்க்குடிமகன் ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிற பெருமித உணர்வோடு மூழுமையாக ஒத்துழைத்து, ஒரே மனத்தோடு என்னைத் தேர்ந்தெடுத்தமைக்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு காலத்தில், பாரதக் கதையில் தருமன் யாகம் நடத்துகிறபோது யாராவது ஒருவருக்குத் தலைமை தர வேண்டுமென்று யோசித்தார்கள். யாருக்குத் தருவது என்ற விவாதம் நடந்தபோது, கடைசியாக அதைக் கண்ணனுக்குத் தான் தர வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அப்படிக் கண்ணனுக்குத் தந்த போது கூட மறுப்புக்கள் எழுந்தன. ஏச்சுக்கள் எழுந்தன என்றாலும் கண்ணனுக்கே தலைமை தரப்பட்டது. அப்படி ஏச்சுக்களுக்கும், மறுப்புக்களுக்குமிடையே அன்று கண்ணன் தலைமை ஏற்றான். தருமன் அந்தத் தலைமையைத் தந்தான். ஆனாலும் இன்றைக்குத் தருமத்தின் தலைவனாக இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களும், அதே வழியாகச் செல்கிற நீங்கள் அத்தனை பெருமக்களும் சேர்ந்து, கண்ணனுக்கு அல்ல, கண்ணன் சார்ந்த கல்லூரியில் இருந்த தமிழ்க் குடிமகனுக்கு இந்த வாய்ப்பைத் தந்திருக்கிறீர்கள். ஆனாலும் ஒரு வேறுபாடு. அன்றைக்குக் கண்ணன் கூட ஒரு துவாரகாபுரியின் மன்னனாகத்தான் திகழ்ந்தான். எனவே, அன்றைக்குத் தந்த தலைமை ஒரு மன்னனுக்குத் தரப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தந்திருக்கிற தலைமை ஒரு குடிமகனுக்குத் தரப்பட்டிருக்கிறது. மன்னர் ஆட்சிக் காலத்தில் அந்தத் தலைமை பொருந்தும். மக்களாட்சிக் காலத்தில் ஒரு குடிமகனுக்குத் தருவது தான் பொருந்தும் என்று ஏற்றுக் கொண்ட உங்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1989 பிப்ரவரி 8

'ஸ்பீக்கர்' என்றால் என்ன பொருள் என்று இந்த அவையில் ஆராயப்பட்டது. எனக்கு முன்னால் மிகச் சிறப்பாகப் பணியாற்றிய மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள் அதுபற்றி ஒரு குறிப்பைச் சொல்லியிருந்தார்கள். பொதுவாகவே 'ஸ்பீக்கர்' என்பது மேல் நாட்டில் 'ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்' என்று சொல்லப்படுகிற மக்கள் சபை நேரிடையாக மன்னருக்கு அந்தச் செய்திகளை எடுத்துச் சொல்ல முடியாது என்பதற்காக, அந்த மக்களுடைய கருத்தை மன்னருக்குச் சென்று சொல்கிற ஒரு பேச்சாளர் என்ற முறையிலே தான் இந்த 'ஸ்பீக்கர்' என்ற சொல் கையாளப்பட்டது. ஆனால், காலப்போக்கில் 'Semantics' என்று சொல்லப்படுகிற சொற்பொருளியல்படி சொற்களின் பொருள் மாறுபடுவதுண்டு, வடிவம் வேறுபடுவதுண்டு என்பதைப் போல இந்த 'ஸ்பீக்கர்' என்ற சொல்லுக்குரிய பொருளும் மாறுபட்டுப்போய் விட்டது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நடைமுறைகளின்படி பார்த்தால் 'ஸ்பீக்கர்' என்பவர் அதிகம் பேசுகிறவர் அல்ல. இன்னும் சொல்லப்போனால், நான் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகம் பேசாமல் இருக்கிறேனோ அவ்வளவு நல்லது என்றுதான் கருதுகிறேன். நீங்கள்தான் நிறையப் பேச வேண்டும். நான் தேவைப்படுகிறபோது மட்டும் குறுக்கிட வேண்டுமே தவிர, நானே குறுக்கிட்டு வெகுவாகப் பேசுகிற அல்லது மிகையாகப் பேசுகிற ஒரு சூழ்நிலை எழுமானால், இது இந்த அவைக்குப் பொருத்தமானதாக இருக்காது என்று நான் கருதுகிறேன். அதே நேரத்தில், இந்த மன்றத்தினுடைய மாபெரும் உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று வந்திருக்கிறோம் என்பது மட்டுமல்ல; இங்கே நடைபெறுகிற விவாதங்களில் 25 விழுக்காடு விவாதங்கள்தான் நாட்டு மக்களுக்கு நேரிடையாகப் பயன்படக்கூடியவை, அதே நேரத்தில், நாட்டு மக்களுக்குத் தொண்டாற்றுகிறோம் என்ற உணர்வோடுதான், அவர்கள் தந்த வாக்குகளைப் பெற்றுத்தான், அவர்களுடைய கருத்துக்களை எதிரொலிக்கிற மன்றமாக, அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வைக்கிற மன்றமாகத்தான் இந்த அவையை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அந்த வகையில் பார்த்தால் இங்கே நடைபெறுகிற வாதங்கள், உங்களுடைய ஆணித்தரமான பேச்சுக்கள், உங்களுடைய ஆர்வத்தின் வெளிப்பாடாக இருந்தாலும், மக்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற ஓர் உறுதிப்பாடாக இருக்கவேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–10)

இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் வாய்ப்புக் கிடைக்கிறபோதெல்லாம் குறிப்பாகத் தங்களுடைய தொகுதிப் பிரச்சினைகளை மிகுதியாகப் பேசவேண்டும். அந்த மக்கள் எதிர்பார்ப்பது எல்லாம் எங்களுடைய பிரச்சினைகள் இந்தச் சட்டமன்றத்தில் எவ்வாறு பேசப்பட்டன என்பது தான். இந்தச் சட்டமன்றத்தில் பேசப்பட்ட செய்திகளை நமக்கெல்லாம் பாலமாக விளங்குகின்ற பத்திரிகையாளர்கள் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி,

1989 பிப்ரவரி 8] [பேரவைத் தலைவர்]

உங்களுக்கும் பெருமை சேர்ப்பார்கள். இந்த மன்றத்துக்கும் சிறப்புச் சேர்ப்பார்கள். எனவே, அப்படிப் பேசுகிறபோது, தொகுதிப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசினால் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அவற்றைக் கவனத்தில் வைத்துக்கொண்டு அந்தத் தொகுதிகளுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்ய முடியும்.

அதே நேரத்தில் பொதுப் பிரச்சினைகள் என்று வருகிறபோது, அதில் உங்களுடைய ஆழமான கருத்துக்களை, ஆணித்தரமான வாதங்களை நான் முழுமையாக அனுமதிப்பேன், ஏற்றுக்கொள்வேன். அதே நேரத்தில் Free and Frank Expression என்ற முறையில் மனம் திறந்து வெளிப்படையான பேச்சாக இருப்பதில் எந்தவகையான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் இந்த நாட்டு மக்களிடத்தில் நாம் எடுத்து வைக்கின்ற கருத்துக்களுக்கு ஒரு வரம்பு உண்டு. சூடான பொருள் எப்போதும் சுவையாக இருக்கும் என்பதில் எனக்கு இரண்டாவது கருத்தில்லை. ஆனால் இங்கு சூடான வாதங்களும் சுவையாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதிலே தவறு இல்லை. ஆனால் அந்தச் சூடு அனலாக மாறிவிடாமல், கனலாக மாறிவிடாமல் நீங்கள்தான் கட்டிக்காத்துக் கொள்ளவேண்டும். அப்படிக் கட்டிக் காக்கின்ற பொறுப்பைச் சுட்டிக்காட்டுகின்ற பொறுப்பு எனக்கு உண்டு என்பதை இந்த அவைக்கு நான் உணர்த்த விரும்புகிறேன்.

அப்படி அனலாகவும் கனலாகவும் மாறுகிறபோது, அது எதிரிலே இருப்பவர்களைச் சுடுவது மட்டுமல்ல, ஏந்துபவர்களையும் சுட்டுவிடுகிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். எனவே அப்படி வருகிறபோது, இந்த அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றுகிற முறையில், இந்த அவையினுடைய கண்ணியத்திற்கு ஏற்ப ஆணித்தரமான வாதங்களை அடுக்கிக் கொண்டு போவதில் நீங்கள் அனைவரும் முழு மனதோடு ஈடுபடுகிறபோது, பேரவைத் தலைவர் என்ற முறையில் உங்களுக்கு முழு அனுமதியையும் நான் வழங்குவேன் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இந்த அவையில் பேசப்படுகிற ஒவ்வொரு பேச்சும் நம்முடைய மனச்சான்றின் குரலாக, ஐந்து கோடி மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பதாக, இன்னும் சொல்லப் போனால், உலகம் எங்கும் இருக்கிற தமிழர்கள் எல்லாம் உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்து, தமிழகச் சட்ட மன்றத்தில்தான், தங்களுடைய தலைவிதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. என்று சொல்லக்கூடிய அளவிற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மிகப் பெரிய பேராவத்தோடு, எதிர்பார்க்கப்படுகிற பேச்சுக்களாக இருக்கின்றன என்பதை உங்கள் பேச்சுக்கு வலியூட்டும் என்பதால் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[பேரவைத் தலைவர்] [1989 பிப்ரவரி 8

அதேநேரத்தில் நம்முடைய பொறுப்பு வருங்கால சமுதாயத்தை ஒரு சமதர்ம சமுதாயமாக அமைக்கவும், சமூக நீதிகள் அத்தனை பேர்களுக்கும் கிடைக்கச் செய்யவும், வழிவகை செய்வதற்கு இந்தச் சட்டமன்றம் பாடுபடவேண்டும். மொழிக்கும், இனத்திற்கும், நாட்டுக்கும் தொண்டாற்றுகின்ற உணர்ச்சி நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அந்த உணர்ச்சிகளை நெஞ்சிலே ஏந்திச் செயல்படுகிற காலத்தில், இங்கு வாதங்கள் மட்டுமே மணக்கும். அந்த வாதங்கள் மட்டுமே, சட்டமன்றத்தில் பூத்து நிற்கிறபோது, இந்தச் சட்டமன்றம் தன்னுடைய புகழை, இந்திய அளவில், உலக அளவில் சிறப்பாகப் பரப்பும் என்று நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் சட்டப்பேரவைத் தலைவர்களாக இருந்தவர்கள் நல்ல முன்னுதாரணங்களைக் காட்டியிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்பு வேண்டுமென்று இங்கே சொல்லப்பட்டது. இது ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சொல்லப்பட்டு வருகிறது. மதிப்பிற்குரிய மாண்புமிகு மூத்தைய சட்டப் பேரவைத் தலைவர் திரு. திருட்டிணா ராவ் அவர்கள் குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்புகள் கண்டிப்பாக வழங்கப்படும் என்று சொல்கிற அதே நேரத்தில், ஆளும் கட்சித் தரப்பிலே இருந்து எங்களுக்கு இருக்கிற வாய்ப்புகளை நீங்கள் எப்படி மதிப்பீர்கள் ? என்று கேட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். உங்களுக்கு அதிக வாய்ப்பு வேண்டுமானால், அருள்கூர்ந்து எதிர்க்கட்சிப் பக்கம் வாருங்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே எதிர்க்கட்சிகளுக்குக் கண்டிப்பாக அதிக வாய்ப்புகள் வழங்கப்படும் என்பதை நான் இப்போதே உறுதிப்படுத்துகிறேன். அதற்காக ஆளும் கட்சித் தரப்புக்குக் குறைவாக வழங்கப்படும் என்று பொருள் அல்ல. சமமான வாய்ப்புகள் வழங்கப்படும் என்று நான் உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

அதே நேரத்தில் ஒரு கட்சியைச் சேர்ந்தவர் ஒருவராயினும் அவருக்கு உரிய மதிப்பு அளிக்கப்படும். ஏன் என்று கேட்டால் எண்ணிக்கை பலத்தைக் கொண்டல்ல, எண்ணப் பலத்தைக் கொண்டுதான் நாம் இந்த அவையை அமைத்து இருக்கிறோம். எனவே ஒருவராயினும் அவருக்குக் கிடைக்கிற வாய்ப்பை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இது கண்ணியத்தோடு கட்டிக்காக்கப்படும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

எதிர்க்கட்சிகள் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று 1962ஆம் ஆண்டு மார்ச்சு 31ஆம் நாள் இன்றைய தமிழக முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது பேசியிருக்கிறார்கள். அந்த வாதம் உங்களுக்கு நிறையப் பயன்படும், உங்கள் சார்பில் அது எடுபடும் என்று நான் கருதுகிறேன். '' எதிர்க்கட்சிகள் நிலைக்கண்ணாடிகளுக்குச் சமம். ஆளும் கட்சி தன் முகத்தில் உள்ள பருக்கள், மருக்கள் ஆகியவற்றைக் கவனித்து முகத்தை திருத்திக்கொள்ள வேண்டும். அதற்கு எதிர்க்

1989 பிப்ரவரி 8] [பேரவைத் தலைவர்]

கட்சி என்ற நிலைக்கண்ணாடி பயன்படும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையே நீங்கள் உங்களுடைய வாதத்திற்குப் பக்கபலமாக வைத்துக்கொள்ளலாம். எனவே இந்தக் கருத்தைச் சொன்ன எதிர்க்கட்சி முதல்வர் அவர்களே, இன்று ஆளும் கட்சி முதல்வராக இருப்பதால், உங்களுடைய முழுமையான கருத்துக்களுக்கு இந்த அவையில் நிறைய வரவேற்பு இருக்கும் என்பதை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

அதே நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் அந்த நிலைக் கண்ணாடியினுடைய ரசம் போய்விடாமலும், அதே நேரத்தில் கீறல் விழுந்து விடாமலும் மிகவும் எச்சரிக்கையாகவும், கவனமாகவும் அதைப் பேணிக் காக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக இந்த அவை தமிழ் இனப் பண்பு கொண்டது. தமிழ் இனத்திற்கு என்று ஒரு தனிப் பண்பு உண்டு. Cultural Heritage of Tamils என்று எத்தனையோ ஆங்கில அறிஞர்களும், தமிழ் அறிஞர்களும் உலகத்திற்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதே நேரத்தில் கால்டுவெல் போன்றவர்களும், கில்பர்ட் சிலேட்டர் போன்றவர்களும், 'இந்திய நாகரீகத்தில் திராவிடப் பண்பு' என்று சுட்டிக்காட்டி, திராவிட இனத்திற்கு என்று சில தனிப் பண்புகளை நிலைநாட்டியிருக்கிறார்கள். எனவே, அடிப்படையில் தமிழ் இனப் பண்பையும், அதனை அடுத்து திராவிட இனப் பண்பையும், ஒட்டு மொத்தத்தில் இந்திய நாகரீகத்தையும் எடுத்துக்காட்டி, உலக அரங்கில் ஒளிமிகுந்த சட்டமன்றம் என்ற பெயரை எடுக்கின்ற வாய்ப்பை இந்தச் சட்டமன்றம் உருவாக்கித் தரும். அதற்கு உங்களுடைய முழுமையான ஒத்துழைப்பு வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அவை முன்னவர் அவர்களும் நம்முடைய முதல்வர் அவர்களும் குறிப்பிட்டதைப் போல 1921 ஆம் ஆண்டுக்குப் பின்னால் தான் இந்தச் சட்டமன்றம் செயல்படத் தொடங்கியது. அதிலிருந்து 67 ஆண்டுகளுக்குப் பின்னால் வருகிற இந்தச் சட்டமன்றம் கண்டிப்பாக நல்ல மரபுகளை கட்டிக் காக்கும். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் சுட்டிக் காட்டினார்கள் ''அல்லவை நீக்கி நல்லவை மட்டுமே நாட வேண்டும்'' என்று. எப்போதுமே ''முன்னோர் மொழிகளைப் பொன்னே போல் போற்ற வேண்டும்'' என்று கருதுகிறவன் நான். அந்த முன்னோர் மொழிகள் எந்த அளவுக்கு அவைக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும் பொருந்தும் என்பதைக் கண்டறிந்து சொல்வதில் எனக்கு ஒன்றும் தொல்லை இல்லை. எனவே அவற்றை நீங்கள் நினைவூட்டுகிற காலத்திலும் சரி, ஆளும் கட்சித் தரப்பினர் நினைவூட்டுகிற காலத்திலும் சரி ஏற்றுக்கொண்டு அதற்கு ஏற்ப நாம் முன் வைப்போம் என்று குறிப்பிட விரும்புகிறேன். முன்னால் இருந்த சட்டப்பேரவைத் தலைவர்கள் கிருட்டிண ராவ் போன்றவர்கள், சிவசண்முகனார் போன்றவர்கள், கோபால மேனன் போன்றவர்கள், ஆதித்தனார், புலவர் கோவிந்தன் போன்றவர்களை எல்லாம் கண்டிப்

[பேரவைத் தலைவர்] [1989 பிப்ரவரி 8

பாக நான் வழிகாட்டிகளாகக் கொண்டு அவர்களுடைய நல் முன் உதாரணங்களைப் பின்பற்றுவேன் என்று நான் குறிப்பிட விரும்பு கிறேன். இந்த அவையில் இருக்கின்ற படங்கள் குறிப்பாக வள்ளுவர் படம்,

" சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் ".

என்ற குறளை மட்டும் தருகிறது. நாம் இன்னும் அதற்கு ஒரு படி மேலே போகவேண்டும். இந்த அவையில் வெறும் பயன் உள்ள சொற்களை மட்டும் பேசுவதில் பயன் இல்லை. அது பெரும் பயன் உள்ள சொல்லாக இருக்கவேண்டும். ஏனென்று கேட்டால் அது தான் அரும் பயன் ஆயும் அறிவுடையார் சொல்லு கிற சொற்கள் என்று வள்ளுவர் சொன்னதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல, குடியாட்சியின் மீது நல்ல பற்றுக் கொண்டு நான் இந்தச் சட்டப்பேரவைத் தலைவர் பொறுப்பை நிறைவேற்று வேன் என்று குறிப்பிட்டு மேல் நாட்டு மேற்கோள் ஒன்றை நான் குறிப்பிட வேண்டும். Above all, he must have a deep seat of reverance for the institution of Parliament, a sincere respect for its traditions derived from a deeper understsnding of what lies behind an outward ceremony and an unshakeable faith in democratic Government." எனவே நல்ல மரபுகளை, மக்களாட்சி மரபுகளைப் பேணுவதில் நான் என்றைக்கும் பின் வாங்க மாட்டேன் என்று குறிப்பிடவிரும்புகிறேன். அதே நேரத்தில் "Every Speaker is possessed of the wisdom of Socrates the patience of Jab and the wit of Oscar Wilde.' என்று ஒரு மேற்கோள் குறிப்பிடுகிறது. எனவே 'சாக்கரட்டீஸ்' உடைய அந்த நுண்ணறிவும் 'சாப்' என்பவருடைய அந்தப் பொறுமையும் 'ஆஸ்கர் வைல்டு' உடைய நகைச்சுவையும் இந்த மன்றத்தில் பூத்துக் குலுங்கட்டும். அதற்கு நாம் அனைவரும் உறுதுணையாக இருப்போம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சங்க இலக்கியங்களில் சொல்லப்படுவது உண்டு. 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்று.இந்த அரசும் இந்த அவையும் அறநெறிகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கும். அதே நேரத்திலே கலித்தொகையில் சொல்லப்படுவதைப் போலப் " பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகல் " என்ற கலித்தொகை வரிகளை நீங்கள் அனைவருமே பொன்னே போல் போற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை உணர்த்த விரும்புகிறேன். 'அருளும் அன்பும் நீக்கி நீங்கா நிரையம் கொள்பவரோடு ஒன்றாது காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி' என்று நரிவெரூ உத்தலையார்

1989 பிப்ரவரி 8] [பேரவைத் தலைவர்]

குறிப்பிட்டார். அருளும் அன்பும் அகற்றி விட்டு ஒரு தவறான அணுகு முறையில் வாழ்பவர்களை விட்டு ஒதுங்கி, முற்றிலும் சேயைத் தாய் காப்பது போல யார் வாழ்கிறார்களோ அவர்களைப் போல வாழவேண்டும் என்று அந்தப் புலவர் சொன்னார். இங்கே '' அருள் '' முதலமைச்சர் அவர்கள் வடிவில் இருக்கிறது. '' அன்பு '' அதற்குப் பக்கத்தில் இருக்கிறது. '' ஜெயம் '' எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறது. இன்னும் இங்கே இருக்கிற மாண்புமிகு பெருமக்கள் அத்தனை பேரும் அன்பையும், அருளையும் தங்களுடைய அரணாகக் கொண்டு இருக்கிற பெரு மக்கள் என்பதை நான் நினைவு கூர்ந்து அந்த நரிவெரூ உத்தலையார் தன்னுடைய அரசுக்குச் செவி அறிவுறுத்தலாகச் சொன்னதையே எனக்கும் சொன்னதாக எடுத்துக்கொண்டு இதை நிறைவேற்றுவேன் எனக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சில பேர் சொன்னார்கள். சொற்போருக்கு நான் நடுவராக இருந்தவன். அருள்கூர்ந்து மற்போருக்கு வந்து விட வேண்டாம் என்று குறிப்பிட்டார்கள். நான் ஒன்றை மட்டும் நினைவூட்ட விரும்புகிறேன். வானளாவிய அதிகாரம் என்பது இந்தப் பேரவைத் தலைவருக்கு இருக்கிறது என்பதைக் கடந்த காலத்தில் நாம் நினைவில் கொண்டு இருக்கிறோம். ஆனாலும் நான் திருப்பித் திருப்பி உங்களுக்குச் சொல்ல விரும்புவது எல்லாம் அப்படி ஓர் அதிகாரம் இருப்பதாக அருள் கூர்ந்து நீங்கள் எனக்கு நினைவூட்டாதீர்கள் என்று மட்டும் பொறுப்போடு கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு)

இங்கு இருக்கின்ற படங்கள் வெறும் படங்கள் அல்ல. அவை பாடங்கள்,. எனவே நான் மிகப் பெரிய பெருமக்கள், இந்த நாட்டுக்கு உழைத்துத் தொண்டாற்றிய தந்தை பெரியார் அவர்களைப் போல 94 வயதுக்கு மேலும் தொண்டு செய்வது என்றால் என்னவென்று இந்த உலகத்திற்கு எடுத்துக்காட்டிய பெருமக்கள் வழியில் நின்று அறிஞர் அண்ணா போன்றவர்கள், காமராசர் போன்றவர்கள், இராஜாஜி போன்றவர்கள், இன்னும் பல பெருமக்களுடைய வழிகாட்டுதலைக் கொள்கிறோம் என்று சொன்னால் அவர்கள் எல்லாம் இந்தச் சமுதாயத்தை ஒட்டுமொத்தமாகத் தூக்கி நிறுத்துவதற்கு, தாழ்ந்து கிடக்கின்ற தமிழ் இனம் தலைநிமிர்ந்து நிற்பதற்காக அரும்பாடுபட்டவர்கள். அயராது உழைத்தவர்கள். எனவே, அவர்களுடைய வழிகளைப் போற்றி நாம் அயராது பாடுபடுகிறபோது இந்த மன்றம் அதற்குரிய மதிப்பை என்றென்றைக்கும் பேணிக்காக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது; அறிஞர் அண்ணா அவர்கள் , நேருக்கு நேர் நின்று நமக்குத் தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் சொன்னதைப் போலவே கண்ணியத்தைக் கட்டிக் காப்போம், கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவோம், கடமையைத் தொடர்வோம்

என்று கூறி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேரவை முன்னவர் அவர்களுக்கும், பாராட்டிப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் இந்த அவையில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கும், குறிப்பாக தொடர்ந்து எனக்கு ஒத்துழைப்பு நல்கப் போகிற எதிர்க்கட்சிப் பெருமக்களுக்கும், நமக்கு எல்லாம் பாலமாக விளங்கி இந்த நாட்டு மக்களுக்கு நம்மைப் பற்றி நன்கு அறிமுகப்படுத்தப் போகிற பத்திரிகையாளர்களுக்கும், இந்தச் சட்டப் பேரவையைச் சிறப்பாக நடத்தத் துணை செய்யப்போகின்ற இந்தச் சட்டப் பேரவைச் செயலகத்திற்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

(மு.ப. 11-20)

5. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வினாக்களுக்கான அறிவிப்புகள் வந்துள்ளவை அனுமதிக்கப்பட்டுத் துறைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. விடைகள் வருவதற்கு காலதாமதமாகும். எனவே, 13-2-1989 ஆம் நாள் முதல் சில நாட்களுக்கு வினாக்கள்-விடைகள் நேரம் இருக்காது. ஏற்கெனவே அறிவித்தபடி 11-2-1989 சனிக்கிழமை காலை 11.00 மணிக்குப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவார்கள் என்பதை நினைவுப்படுத்துகிறேன்.

9-2-1989, 10-2-1989 ஆகிய இரு நாட்களிலும் பேரவைக் கூட்டம் இல்லை.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 13-2-1989 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை காலை 11-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

ஏதும் இல்லை.

என்று கூறி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேரவை முன்னவர் அவர்களுக்கும், பாராட்டிப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் இந்த அவையில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கும், குறிப்பாக தொடர்ந்து எனக்கு ஒத்துழைப்பு நல்கப் போகிற எதிர்க்கட்சிப் பெருமக்களுக்கும், நமக்கு எல்லாம் பாலமாக விளங்கி இந்த நாட்டு மக்களுக்கு நம்மைப் பற்றி நன்கு அறிமுகப்படுத்தப் போகிற பத்திரிகையாளர்களுக்கும், இந்தச் சட்டப் பேரவையைச் சிறப்பாக நடத்தத் துணை செய்யப்போகின்ற இந்தச் சட்டப் பேரவைச் செயலகத்திற்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

(மு.ப. 11-20)

5. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வினாக்களுக்கான அறிவிப்புகள் வந்துள்ளவை அனுமதிக்கப்பட்டுத் துறைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. விடைகள் வருவதற்கு காலதாமதமாகும். எனவே, 13-2-1989 ஆம் நாள் முதல் சில நாட்களுக்கு வினாக்கள்-விடைகள் நேரம் இருக்காது. ஏற்கெனவே அறிவித்தபடி 11-2-1989 சனிக்கிழமை காலை 11.00 மணிக்குப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவார்கள் என்பதை நினைவுப்படுத்துகிறேன்.

9-2-1989, 10-2-1989 ஆகிய இரு நாட்களிலும் பேரவைக் கூட்டம் இல்லை.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 13-2-1989 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை காலை 11-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

ஏதும் இல்லை.